Registered as a News Paper | பக்கங்கள்: 04 | விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம்: 02 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | தை 11 | (25-01-1992) | சனிக்கிழமை | ஓசை: 341

## மாகாணசபை அதிகாரங்களை பறிக்க அரசு திட்டம்

மாகாண சபைகளுக்குரிய சில கடமைகளைப் பறித்து மாகாணசபைகளின் செயலாளர்களுக்கு வழங்க அரசாங்கம் உத்தேசித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. திட்டம் அமுலாக்கல், அபிவிருத்தித் திட்டம் அமுலாக்கல் போன்ற பணிகள் மாகாணசபைகளின் செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், அவர்கள் மாகாணசபைகளுடன் இணைந்து செயலாற்றுவார்கள் என்றும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இப்புதிய திட்டம் ஏப்பிரலில் சில மாகாணசபைகளில் பரீட்சார்த்த திட்டமாக அறிமுகப்படுத்தப்படவுள்ளது. மாகாணசபைகளின் பதவிக் காலம் ஏப்ரல் 1 ஆம் திகதி 1993-ல் முடிவடைகிறது. பிற்பாடு புதிய தேர்தலை வைக்கவேண்டும்.

# உலகில் ஆள் கடத்தல்; சிறிலங்கா அரசு முதலிடம்

## வவுனியாவில் கைதானோர் தென்னிலங்கை முகாமில்

(வவுனியா)

வவுனியாவில் கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் தென்னிலங்கை தடுப்பு முகாம்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

சமீபத்தில் வவுனியா நகரிலும் நகருக்கு வெளியிலும் சிறிலங்கா இராணுவத்தினரால் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் அனைவரும் வவுனியா 'ஜோசெப்' இராணுவ முகாமில் வைத்து விசாரிக்கப்பட்டு தடுப்பு முகாம்களுக்கு அனுப்பப்படுகின்றனர்.

கைது செய்யப்படும் அப்பாவி இளைஞர்களின் நிலையை எண்ணி உறவினர்கள் இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொள்கின்றபோதிலும் எதுவிதபலனும் கிடைப்பதில்லை. (தி)

## வவுனியாவில் படை குவிப்பு தாக்குதலுக்கு முஸ்தீபு

(வவுனியா)

வவுனியாவில் மீண்டும் ஒரு பாரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்வதற்கான முயற்சியில் இராணுவம் ஈடுபட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெகுவிரைவில் தாக்குதல் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படுவதை அவதானிக்கமுடிகிறது. வவுனியா கிராமப்புறப் பகுதிகளின் மேலால் ஹெலிகொப்ரர் தாழப்பறந்து நோட்டமிட்டுச் செல்வதையும் குறிப்பிட்ட பகுதிகள் சிலவற்றை விமானங்கள் வேவு பார்ப்பதையும் அவதானிக்க முடிகிறது.

இதேசமயம் வவுனியா இராணுவமுகாம்களில் இராணுவத்தினரின் தொகை அதிகரித்திருப்பதாகவும் கூறப்படுகிறது. (தி)

## ஐ. நா. அறிக்கை தெரிவிப்பு

(லண்டன்)

ஆட்கள் காணாமற் போன-போய்க்கொண்டிருக்கின்ற, விவகாரத்தில் சிறிலங்காவே உலகில் முதலிடத்தைப் பெறுவதாகவும், மனித உரிமைகள் மீறல் விவகாரத்தில் சிறிலங்கா அரசின் நிலை அழுத்தமான பல கேள்விகளை எழுப்பியிருப்பதாகவும் ஐ. நா. சபையின், இன்னும் பகிரங்கப்படுத்தாத அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக என பி. பி ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

இலங்கையில் ஆயுதப்படையினரால் கடத்திச் செல்லப்பட்டுபின் காணாமல்பேனோர் விபரங்கள் அடங்கிய அறிக்கையொன்றை ஐ நா. அடுத்த வாரம் மனித உரிமைகள் ஆணைக்குழு முன்பு தாக்கல் செய்யவுள்ளது. இவ்வறிக்கை ஆணைக்குழுவின் பார்வைக்கும், பரிசீலனைக்கும், விவாதத்திற்கும் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## 110 ஆசிரியர்கள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் விருப்பத்திற்கிணங்க நூற்றிபபத்து ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று காலையாழ். கல்வித்திணைக்களத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் கூடிய இடமாற்ற சபைக் கூட்டத்திலேயே இந்த இடமாற்றங்கள் ஆசிரியர்களின் வளங்களை வீணடிக்காத வகையில் நியாய பூர்வமான முறையில் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படு

(4ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாடுமீது தாக்குதல் தவிர்க்கமுடியாததாம்

### சரத்முனசிங்கா

(கொழும்பு)

யாழ் குடாநாட்டில் பாரிய இராணுவத் தாக்குதல் ஒன்று நடத்தப்படுவது தவிர்க்க முடியாதது என இராணுவ பேச்சாளர் கேணல் சரத்முனசிங்கா தெரிவித்துள்ளார்.

ஆனால் இதுகுறித்து மேலதிக விபரம் தெரிவிக்க அவர் மறுத்து விட்டார்.

புலிமுகாம்கள் விமானத் தாக்குதலுக்கு இலக்காகக் கூடும் என்பதனால் குடிமக்கள் முகாம்களுக்கு அருகே வசிக்கக்கூடாது எனவும் எச்சரிக்கை துண்டுப் பிரசுரங்கள் யாழ். குடாவில் போடப்பட்டதாகவும் தெரிவித்தார்.

ஆனால் அடுத்த தாக்குதல் எங்கு நடத்தப்படும் என்று திட்டவட்டமாக அவர் கூறவில்லை.

## இராணுவத்தால் சுட்டுக்கொலை

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் இருஅப்

(4ஆம் பக்கம் பார்க்க)

### சீனன்குடாக் குண்டு வெடிப்பு

## 500 மில்லியன் ரூபா நட்டம்; சேதம் குறித்து இருட்டடிப்பு

(கொழும்பு)

சீனன்குடா விமானத்தளத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்பினால் சுமார் ஐந்நூறு மில்லியன் ரூபா அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். பெயர் குறிப்பிட விரும்பாத அந்தஅதிகாரி மேலும் கூறுகையில் யுத்த ஆயுதங்கள் களஞ்சியப்படுத்தி வைக்கும் கட்டடம் முற்றாக சேதம் அடைந்ததாகவும், அதற்குள் கிடந்த ஆயுதங்கள் முற்றாக அழிந்ததாகவும் தெரிவித்தார்.

இதேவேளை சீனன்குடா விமானப்படை தலைமையகத்தில் ஏற்பட்ட குண்டுவெடிப்பினால் ஏற்பட்ட உயிர், உடைமை இழப்புக்கள் இருட்டடிப்புச் செய்யப்பட்டு வருவதாகாகொழும்பிலிருந்து கிடைக்கும் சய்திகள் தெரிவிக்கின்றன

## சிவில் நிர்வாகத்தை நடத்த அகதிகளை நாடுகிறது அரசு

(கொழும்பு)

இராணுவத்தின்கட்டுப்பாட்டிலுள்ள இடங்களில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த திருமலை திரும்பிய அகதிகளில் உள்ள உத்தியோகத்தரைப் பயன்படுத்த சிறிலங்கா திட்டதுட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பிய அகதிகளில் அரச ஊழியர்கள் இருந்தால் அவர்களுக்கு உறுதியான தொழில் வழங்கப்படும். ஆனால் வேலைக்கு திரும்ப காலக்கெடுவிதிக்கவில்லை என சர்வதேச விவ

(4ஆம் பக்கம் பார்க்க)

## சீனன்குடாகுண்டுவெடிப்பு; அகதிகள் கடலில் பகற்றம்

## பெப்.15இல்எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சை

## நான்கு வாரங்களில் முப்படைகளுக்கு

விக்கின்றன.
வெகுவிரைவில் தாக்குதல்

குறிப்பிட்ட பகுதிகள் சில வற்றை விமானங்கள் வேவு

# குடாநாடுமீது தாக்குதல் தவிர்க்கமுடியாததாம்

## சரத்முனசிங்கா

(கொழும்பு)

யாழ் குடாநாட்டில் பாரிய இராணுவத் தாக்குதல் ஒன்று நடத்தப்படுவது தவிர்க்க முடியாதது என இராணுவ பேச்சாளர் கேணல் சரத் முனசிங்கா தெரிவித்துள்ளார்.

ஆனால் இதுகுறித்து மேலதிக விபரம் தெரிவிக்க அவர் மறுத்து விட்டார்.

புலிமுகாம்கள் விமானத் தாக்குதலுக்கு இலக்காகக் கூடும் என்பதனால் குடிமக்கள் முகாம்களுக்கு அருகே வசிக்கக்கூடாது எனவும் எச்சரிக்கை துண்டுப் பிரசுரங்கள் யாழ். குடாவில் போடப்பட்டதாகவும் தெரிவித்தார்.

ஆனால் அடுத்த தாக்குதல் எங்கு நடத்தப்படும் என்று திட்டவட்டமாக அவர் கூறவில்லை.

## இராணுவத்தால் சுட்டுக்கொலை

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் இருஅப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

கிறது.

(தி) யினரால் கடத்திச் செல்லப்

### சீனன்குடாக் குண்டு வெடிப்பு

# 500 மில்லியன் ரூபா நட்டம்; சேதம் குறித்து இருட்டடிப்பு

(கொழும்பு)

சீனன்குடா விமானத்தளத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்பினால் சுமார் ஐந்நூறு மில்லியன் ரூபா அரசுக்கு நஷ்டமேற்பட்டிருப்பதாக இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். பெயர் குறிப்பிட விரும்பாத அந்தஅதிகாரி மேலும் கூறுகையில் யுத்த ஆயுதங்கள் களஞ்சியப்படுத்தி வைக்கும் கட்டடம் முற்றாக சேதம் அடைந்ததாகவும், அதற்குள் கிடந்த ஆயுதங்கள் முற்றாக அழிந்ததாகவும் தெரிவித்தார்.

இதேவேளை சீனன்குடா விமானப்படை தலைமையகத்தில் ஏற்பட்ட குண்டுவெடிப்பினால் ஏற்பட்ட உயிர், உடைமை இழப்புக்கள் இருட்டடிப்புச் செய்யப்பட்டு வருவதாகாழும்பிலிருந்து கிடைக்கும் சய்திகள் தெரிவிக்கின்றன

விபரங்கள் அடங்கிய அறிக்கையொன்றை ஐ நா. அடுத்த வாரம் மனித உரிமைகள் செய்யவுள்ளது. இவ்வறிக்கை ஆணைக்குழுவின் பார்வைக்கும், பரிசீலனைக்கும், விவாதத்திற்கும் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

மாற்றங்கள் ஆசிரியர்களின் வளங்களை வீணடிக்காத வகையில் நியாய பூர்வமான முறையில் மேற் கொள்ளப் பட்டதாக தெரிவிக்கப்படு

(4ஆம் பக்கம் பார்க்க)

# சிவில் நிர்வாகத்தை நடத்த அகதிகளை நாடுகிறது அரசு

(கொழும்பு)

இராணுவத்தின்கட்டுப்பாட்டிலுள்ள இடங்களில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த திருமலை திரும்பிய அகதிகளில் உள்ள உத்தியோகத்தரைப் பயன்படுத்த சிறிலங்கா திட்டமிட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பிய அகதிகளில் அரச ஊழியர்கள் இருந்தால் அவர்களுக்கு உறுதியான தொழில் வழங்கப்படும். ஆனால் வேலைக்கு திரும்ப காலக்கெடுவிதிக்கவில்லை என சர்வதேச விவ

(4ஆம் பக்கம் பார்க்க)

# பெப்.15இல்எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சை

அமைய அடிப்படையில் எழுதுவினைஞர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் பதினைந்தாம் திகதி நடைபெறும் என யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைக்கான

(4 ஆம் பக்கம் பார்க்க)

# நான்கு வாரங்களில் முப்படைகளுக்கு ஏற்பட்ட இழப்புகளின் விபரம்

(24-12-91 — 23-01-92)

| திகதி | இடம் | உயிரிழப்பு |
|---|---|---|
| 24-12-91 | கொக்குத்தொடுவாய் (இராணுவம்) | 25 |
| 26-12-91 | வவுனியா நொச்சிமோட்டை (இராணுவம்) | 01 |
| 29-12-91 | திருமலை சல்லி முந்தலில் (இராணுவம்) | 03 |
| 29-12-91 | யாழ். கடல்நீரேரியில் (இராணுவம்) | 09 |
| 3-1-92 | படுவான்கரை (இராணுவம்) | 02 |
| | (சமூகவிரோதிகள்) | 03 |
| 5-1-92 | மணலாறு காட்டுப்பகுதி (ஊர்காவற்படை) | 02 |
| 7-1-92 | வவுனியா ஓலுப்புலம் (இராணுவம்) | 03 |
| 9-1-92 | அம்பாறை மாவட்டம் (இராணுவம்) | 09 |
| 9-1-92 | களுவாஞ்சிக்குடி (சமூக விரோதி) | 01 |
| 10-1-92 | காரைநகர் பொன்னாலை (கடற்படை) | 10 |
| 13-1-92 | திருமலை புளியங்குளம் (இராணுவம்) | 01 |
| 16-1-92 | மன்னார் மாதிக்கிராமம் (இராணுவம்) | 10 |
| 16-1-92 | அம்பாறை கஞ்சிகுடிச்சாறு (விசேட அதிரடிப்படை) | 01 |
| 18-1-92 | கொக்கட்டிச்சோலை (சமூகவிரோதிகள்) | 01 |
| 19-1-92 | வளலாய் (இராணுவம்) | 05 |
| 21-1-92 | திருக்கோணமலை சம்பூர் (இராணுவம்) | 01 |
| 21-1-92 | திருமலைசீனன்குடாவிமானத் தள குண்டு வெடிப்பு (விமானப்படை) | 40 |
| 21-1-92 | திருமலை குச்சவெளி (இராணுவம்) | 20 |
| 22-1-92 | வவுனியா கணேசபுரம் (இராணுவம்) | 10 |
| 22-1-92 | வவுனியா மாமடு (இராணுவம்) | 04 |
| | மொத்தம் | 161 |

| மொத்தமாக கைப்பற்றப் பட்ட ஆயுதங்கள் (24-12-91 — 23-01-92) | |
|---|---|
| ★ ஜி. பி. எம். ஜி. | 1 |
| ★ ஏ. கே. எல். எம்.ஜி. | 8 |
| ★ மினிமினிஎல்.எம்.ஜி. | 1 |
| ★ ரி-69 ஆர். பி. ஜி. | 1 |
| ★ ரி-56-2ரகத்துப்பாக்கி | 27 |
| ★ ரி-56-1ரகத்துப்பாக்கி | 20 |
| ★ ரி-56 ரகத்துப்பாக்கி | 16 |
| ★ ரி-81 ரகத் துப்பாக்கி | 21 |
| ★ ரி-56புதியரகத்துப் பாக்கி | 3 |
| ★ 303 ரகத்துப்பாக்கி | 1 |
| ★ ஜி3 ஏ3 ரகத்துப்பாக்கி | 1 |
| ★ வேட்டைத்துப்பாக்கி | 1 |
| ★ சிக்னல் பிஸ்ரல் | 1 |
| ★ ஜே. ஆர். கைக்குண்டு | 53 |
| ★ ஆர்.பி.ஜி. எறிகணை | 9 |
| ★ 60 எம். எம். மோட்டார் ஷெல் | 22 |
| ★ ரி - 81 ரகத்துப்பாக்கி எறிகணை | 2 |
| ★ ரி - 56 ரவைக் கூடுகள் | 216 |
| ★ ரி - 81 ரவைக் கூடுகள் | 76 |
| ★ ஏ. கே. எல். எம். ஜி. ரவைக் கூடுகள் | 38 |
| ★ நடுத்தர ரவைகள் | 14520 |
| ★ நேற்ரோ ரவைகள் | 800 |
| ★ 303 ரக ரவைகள் | 75 |
| ★ வெளிஇணைப்பு இயந் இயந்திரம் (அவுட் மோட்டர் 65 HP) | 1 |
| ★ தொலைத் தொடர்பு சாதனம் | 4 |
| ★ திசைகாட்டி | 2 |
| ★ தொலைக்காட்டி | 2 |

# சீனன்குடாகுண்டுவெடிப்பு; அகதிகள் கடலில் பதற்றம்

(திருக்கோணமலை)

தமிழகத்திலிருந்து கப்பல் மூலம் திருக்கோணமலை திரும்பிய இலங்கைத் தமிழ் அகதிகள் சீனன்குடா விமானத் தளத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு பற்றி நடுக்கடலில் பயணம் செய்யும் போது வானொலிச் செய்திகள் மூலம் தெரிந்து கொண்டனராம். இதனைத் தொடர்ந்து அவர்கள் மத்தியில் இனம் புரியாத பயம் ஏற்பட்டதாகவும், சிலர் திருமலையில் இறங்க விரும்பாமல் இந்தியாவுக்கே தம்மை மீண்டும் அழைத்துச் செல்லும்படி முறையிட்டதாகவும் தெரிய வருகிறது.

எனினும் இவர்களுக்கு ஆறு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ராணுவ கெடுபிடி அதிகரிப்பு; சம்பூரில் ஆறு தமிழர் கொலை

திருக்கோணமலை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் தமிழ் மக்களை வேட்டையாடுவது கடந்த சில தினங்களில் அதிகரித்திருப்பதாக தெரிய வருகின்றது. கடந்த இருபத்தோராம் திகதி யன்று சம்பூர் பகுதியில் ஆறு தமிழ் மக்கள் சுட்டுக் கொல்

(4ஆம் பக்கம் பார்க்க)

# தீர்வைக்கூறும் உரிமை தொண்டமானுக்கு உண்டு

அமைச்சர் தொண்டமானுக்கோ, அண்டமானுக்கோ இனப் பிரச்சினைக்கான தீர்வைக் கூற உரிமையுண்டு என பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# செஞ்சிலுவை சம்பூர் செல்ல இராணுவம் தடைவிதிப்பு

## மக்கள் பெரும் அவதி

சம்பூர் பகுதிக்கு ஒவ்வொரு புதனன்றும் வருகைதரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் வருகை இராணுவத்தினரால் தடுக்கப்பட்டிருப்ப

(4ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். மக்களின் துன்பங்களை ஜனாதிபதியிடம் விளக்குவோம்

## கத்தோலிக்க நல்லெண்ண குழு

(யாழ்ப்பாணம்)

யாழ். மக்கள் அனுபவித்து வரும் துன்ப துயரங்களையும் இராணுவ நடவடிக்கைகளால் அப்பாவி மக்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்களையும் நாம் கொழும்பு சென்றதும் சிறிலங்கா ஜனாதிபதிக்கு நேரில் எடுத்து விளக்குவோம் என கத்தோலிக்க நல்லெண்ணத் தூதுக்குழுவினர் தெரிவித்தனர்.

நேற்று நண்பகல் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் போதே அவர்கள் இவ்வாறு கூறினர். இம் மாநாட்டில் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு அவர்கள் பதிலளிக்கையில் தமிழ் மக்களின் நியாய பூர்வமான கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டு இராணுவ நடவடிக்கைகள் மூலம் அதனை மூடி மறைக்க அரசு முயற்சித்து வருகிறது என்பதனையும் பொய்பிரசாரங்களின் மூலம் தெற்கில் தனக்கான ஆதரவை திரட்ட முயற்சிக்கிறது என்பதனையும் இங்கு வந்து மக்களைச் சந்தித்ததிலிருந்து தெரிந்து கொண்டோம். நாம் வடக்கின் உண்மை நிலையை சமயப் பிரசங்கங்களின் போது சிங்கள மக்களுக்கு எடுத்து விளக்கவுள்ளோம்.

இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி பேச்சுவார்த்தைகள் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாய பூர்வமான தீர்வு கிடைக்க எம்மாலான சகல முயற்சிகளையும் மேற்கொள்ள எண்ணியுள்ளோம். வடபகுதிக்கு வருவதற்காகபலதடவை நாம் முயற்சிகளை மேற்கொண்ட போதும் அது வவுனியா இராணுவத்தினரால் தடுக்கப்பட்டது எனவும் அவர்கள் கூறினர்.

மேற்படி குழுவினர் வடக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆண் தட்டெழுத்தாளர் தேவை

தமிழ் (ஆங்கிலம் தெரிந்த) தட்டெழுத்தாளர்தேவை. அநுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சான்றிதழ்களுடன் (26-01-92) ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணியளவில் ஈழநாதம், 31 மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில் சமுகம் அளிக்கவும்

(2135)



இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக் கிளை.

1992 வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கான

## அறிவித்தல்

மேற்படி கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 29-03-1992 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 30 மணிக்கு யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். கிளையின் ஒவ்வொரு பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 30 அங்கத்துவப் பிரதிநிதிகள் (இப் பிரதிநிதிகள் வராதவிடத்து அவர்களுக்காக வருகைதரும் பிரதிநிதிகள்) மாத்திரமே இக் கூட்டத்தில் பங்குபற்றலாம். இப் பிரதிநிதிகளின் பெயர்களைப் பிரிவுத் தலைவர்கள் 01-03-92 க்கு முன்பாக எமக்கு அனுப்பி வைக்கவும்.

செயற்குழு உறுப்பினர் தெரிவுக்கான நியமனங்களும் தீர்மானங்களும் 07-03-92 முதல் 21-03-92 பிற்பகல் 4·00 மணி வரை எமது பணிமனையில் ஏற்றுக் கொள்ளப்படும். (இதற்கான படிவங்கள் எமது பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.)

73, கண்டிவீதி,
யாழ்ப்பாணம்.
23-01-92

கௌரவ செயலாளர்

(சி/3838)



க. பொ. த. சாதாரண தரம்
(ஆண்டு 11)

- பகல் முழுநேர வகுப்புகள்
- சனி, ஞாயிறு வகுப்புகள்
- மீட்டல் வகுப்புகள்

ஆரம்பம்
25-1-92 சனி காலை 7-45 மணி

யூனிவேர்சல்


## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம்பெறும் வாராந்தக் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை (26-1-92) காலை 10.00 மணிக்கு கோண்டாவிலிலுள்ளகலை. பண்பாட்டுக்கழக தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது

இவ்வார அமர்வில் கலாகேசரி தம்பித்துரை அவர்கள் 'எனது கலைத்துறை அனுபவங்கள்' எனும் பொருளில் கருத்துரை ஆற்றவுள்ளார்


புதிய
உயர் கல்லூரி
New College of
High Studies
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

A'L 91
பகல் நேர
வினா - விடை
வகுப்புக்கள்

புதிய பிரிவு
இந்து நாகரிகம்
S. அருள்நங்கை
காலை
9.00—10.00மணி

பொருளியல்
மகேந்திரன்
12.00—2.00

அரசியல்
கியூபேட்
மாலை
3.00—5.00

ஆரம்பம்
28.01.92

★ ஏனைய சகல பாடங்களும் நடைபெறுகின்றன. (சி-3843)


## 'டடா' சட்டம் அறிமுகம்
### ஜெயலலிதாவிற்கு சோ பாராட்டு

தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு உதவியும் ஒத்தாசையும் அளித்த சகலருக்கும் எதிராக 'டடா' சட்டத்தை கொண்டுவந்தது நியாயமானதே என்று 'துக்ளக்' சஞ்சிகையின் ஆசிரியர் சோ தெரிவித்துள்ளார்.

இச் சஞ்சிகையின் 22 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு சென்னையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் பேசுகையிலேயே இவ்வாறு அவர் குறிப்பிட்டார். தொடர்ந்து பேசிய சோ;

''டடா சட்டத்தை கொண்டு வந்த தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவை இதற்காக பாராட்டத்தான் வேண்டும்.

''பயங்கரவாதிகள் மீது அத்தகைய கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் விளைவுகள் பாரதூரமானவையாகவே இருக்கும்'' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## மீனவர் மீது கலிபர் தாக்கு

பருத்தித்துறைக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மூன்று மீனவர் மீது சிறிலங்கா கடற்படையின் பீரங்கிப் படகொன்று ஐம்பது கலிபர் தாக்குதலை நடாத்தியுள்ளது எனினும் மீனவர்கள் கடலில்குதித்ததால்காயமேதுமின்றித்தப்பினர். நேற்றுமுன்தினம்காலை பத்தரை மணியளவில் பருத்தித்துறைக்கடலில்இச்சம்பவம் நடந்தது. ம. அந்தோனிப்பிள்ளை ம. அரவிந்தன் தங்கராசசிறி ஆகிய மூன்று மீனவர்களுமே இச் சம்பவத்தில் மயிரிழையில் உயிர் தப்பியோராவர்.


சகல விதமான அச்சு வேலைகள்,
சகல விதமான அச்சுத் தாள்களில்
சகல வர்ணங்களிலும் செய்துகொள்ள

நாடுங்கள்

ஈழநாதம்
31, மகேந்திரா வீதி, (வைமன் வீதி)
யாழ்ப்பாணம்.

★ அரச, தனியார் நிறுவனங்கள், தனியார் வேலைகள் யாவும் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

★ இரவு 10 மணிவரை அச்சுவேலைகள் ஏற்கப்படும்.

இ. 5



DHL உங்கள் கடிதங்களை
பாதுகாப்பாக உலகம் முழுவதும்
எடுத்துச் செல்கிறது
உங்களின் நண்பன்
DHL தபால் சேவை


## பலவந்தமாக அகதிகளை இந்தியா அனுப்பவில்லை
### --- ராம்தாஸ்

(திருக்கோணமலை)

இலங்கைத் தமிழ் அகதிகளை திரும்பிச் செல்லும்படி எந்தவித நிர்ப்பந்தத்தையும் மத்திய அரசோ, தமிழக அரசோ செய்யவில்லை என்று தமிழக மறு வாழ்வுத்துறை தலைமை ஒருங்கிணைப்பாளர் சி. என். ராம்தாஸ் தெரிவித்துள்ளார்.

தமிழகத்திலிருந்து இலங்கை திரும்பிய அகதிகளுடன் வந்த ராம்தாஸ் திருக்கோணமலையில் செய்தியாளர் மத்தியில் பேசும் போதே இதனைத் தெரிவித்தார்.

விருப்பத்தின் பேரில் பெயர் கொடுத்தவர்களையே இவ்வாறு அழைத்து வந்ததாகவும் இவர்களை பாதுகாப்பாக தாம் இலங்கை அதிகாரிகளிடம் ஒப்படைத்ததாகவும் தெரிவித்தார்,

அத்துடன் வரும் 27 ஆம் திகதி மேலும் ஒரு கப்பலில் அடுத்த தொகுதி மக்கள் திருப்பி அழைத்து வரப்படுவார்கள் என்றும் ராம்தாஸ் தெரிவித்தார்.

## 1991இல் காணாமல் போனோர் தொடர்பாக விசாரிப்பதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு

கடத்தப் பட்டு காணாமற் போனோர்பற்றி விசாரிப்பதற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப் பட்டுள்ளது. 1991 ஜனவரி பதினோராம் திகதியிலிருந்து கடந்த பன்னிரண்டு மாதகாலப் பகுதிக்குள் காணாமற்போனோர் பற்றி இவர்கள் விசாரணை நடத்தவுள்ளனர் இந்த ஆணைக் குழுவில் ஐந்து பேர் அங்கம் வகிக்கின்றனர். திரு. எச். ஏ. பி. டி சில்வா இந்த ஆணைக்குழுவின் தலைவராகவும், திரு. சி. பி. டி. சில்வா, ஜனாப் ஏ. வை. எம். உவைஸ், எம். விக்னராஜா, ஆகியோர் அங்கத்தவராகவும் திரு. மூளமலை செயலாளராகவும் பணியாற்றவுள்ளனர்.

## பெ.தோட்டங்கள் நிர்வகிக்க 122 நிறு.விண்ணப்பம்

(கொழும்பு)

அரச உடைமையாக உள்ள பெருந் தோட்டங்களை நிர்வகிக்க என 122 வெளிநாட்டு, உள்நாட்டு நிறுவனங்கள் விண்ணப்பித்துள்ளதாக சிரேஸ்ட நிர்வாக அதிகாரி தெரிவித்துள்ளார்.

அரச உடைமையாக உள்ள பெருந்தோட்டங்களை மக்கள் மயப்படுத்திய பின்னர் அவற்றைநிர்வகிக்கும் பொறுப்களை ஏற்றுக் கொள்ள புரும்பும் நிறுவனங்களிடம் கேள்விப்பத்திரங்களை சிறிலங்கா அரசுகோரியிருந்தது.

இதற்கு இந்தியா, பிரிட்டன், மலேசியா, ஹொங்நாட்டைச் சேர்ந்த நிறுவனங்களும் உள்ளூர் நிறுவனங்களுமாக 122கேள்விப்பத்திரங்கள் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காணிச்சுவீகரிப்பின் பின்னர் ஒரு லட்சத்து 89 ஆயிரத்து 538 ஹெக்டயர் பெருந்தோட்டங்களைமக்கள்பெருந்தோட்டு அபிவிருத்திச்சபை நிர்வகித்து வருவது குறிப்பிடத்தக்கது.


## விசேட அறிவித்தல்

உருக்கு/மரத்தளபாடம்/கட்டிடம் /
நீர்ப்பாசன, நீர் வடிகால் /
மின்சார ஒப்பந்த வேலைகள்

வடமாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கத்தில் அங்கத்தவராகப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே, அரசாங்கத் திணைக்களங்கள் / கூட்டுத்தாபனங்கள் / வங்கிகள் / மாநகரசபை / பிரதேசசபை போன்றவற்றில் மேற்குறிப்பிட்ட ஒப்பந்த வேலைகளைச் செய்வதற்குத் தகுதியுடையவர்களாவார்கள் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

3.00—5.00
ஆரம்பம்
28.01.92
★ ஏனைய சகல பாடங்களும் நடைபெறுகின்றன. (சி-3843)



★ அரச, தனியார் நிறுவனங்கள், தனியார் வேலைகள் யாவும் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

★ இரவு 10 மணிவரை அச்சுவேலைகள் ஏற்கப்படும்.


அரச உடைமையாக உள்ள பெருந்தோட்டங்களை மக்கள் மயப்படுத்திய பின்னர் அவற்றைநிர்வகிக்கும் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள புரும்பும் நிறுவனங்களிடம் காணிச்சுவீகரிப்பின் பின்னர் ஒரு லட்சத்து 89 ஆயிரத்து 538 ஹேக்டயர் பெருந்தோட்டங்களைமக்கள்பெருந்தோட்டு அபிவிருத்திச்சபை நிர்வகித்து வருவது குறிப்பிடத்தக்கது.


க. பொ. த. சாதாரண தரம்

(ஆண்டு 11)

❋ பகல் முழுநேர வகுப்புகள்
❋ சனி, ஞாயிறு வகுப்புகள்
❋ மீட்டல் வகுப்புகள்

ஆரம்பம்

25-1-92 சனி காலை 7-45 மணி

**யூனிவேர்சல்**

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

இதைவிடத் தெரிவு .......
வேறேதும் இல்லை! (சி/3821)


## அறிவித்தல்

தமிழீழ நீதி நிர்வாகப் பிரிவு
தமிழீழ விடுதலைப் புலிகள்
தலைமைச் செயலகம்
தமிழீழம்.

யாழ் மாவட்டத்தில் உள்ள இணக்க மன்றுகள் / மேன்முறையீட்டு மன்றுகள் / ஆரம்ப நீதி மன்றுகளின் தீர்வுகளை இணக்கமாக ஏற்றுக் கொண்டு இதுவரை காலமும் நிறைவேற்றாது உள்ள கட்சிக்காரர்களுக்கும், மேற்படி மன்றுகளில் விசாரணைகளுக்கு சமுகமளிக்காதுள்ள கடசிக் காரர்களுக்கும எதிராக தகுந்த நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது.

1. எனவே இணக்கத் தீர்வுகளை நிறைவேற்றாதுஉள்ள கட்சிக்காரர்கள் 92. 01. 31ம் திகதிக்கு முன் குறித்த மன்றுகளுக்குச் சென்று இணக்கத் தீர்வை நிறைவேற்ற வேண்டும். அல்லது அவ்வாறுநிறைவேற்ற முடியாமைக்குரிய காரணத்தை எழுத்தில் எழுதிகுறித்த மன்றில் ஒப்படைத்தல் வேண்டும்.

2. குறித்த பிணக்குகளில் முறையீட்டாளர்கள் குறித்த மன்றுகளுக்குச் சென்று 92 01. 31ம் திகதிக்கு முன் இணக்கத் தீர்வுப் பிரதியை செயலாளர் / பதிவாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

3. யாழ் மாவட்டத்திலுள்ள இணக்கமன்றுகளில் பிணக்குகள் தாக்கல் செய்துகொள்வதை 92 02 01ம் திகதியில் இருந்து தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளோம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

பொறுப்பாளர்
தமிழீழ நீதி நிர்வாகப் பிரிவு

(2136)


DHL உங்கள் கடிதங்களை
பாதுகாப்பாக உலகம் முழுவதும்
எடுத்துச் செல்கிறது
உங்களின் நண்பன்

DHL தபால் சேவை

**D.H.L. INTERNATIONAL**
C/o Cosmos Marketing Services
120, (200) K.K.S. Road,
Jaffna.

(சி 3815)



ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை 1992
ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை 1991

இப்பரீட்சைகளுக்கான
பயிற்சிப் பரீட்சைகள்
ஒவ்வொரு மாதத்தின் இறுதி
ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 1-00 மணிக்கு
இந்நிறுவனங்களில் எம்மால் நடாத்தப்படும்
முதலாவது பரீட்சை: 26-01-92 பி.ப. 1-00

| | | | |
|---|---|---|---|
| 1. | யாழ்ப்பாணம் | — | Bond கல்வி நிறுவனம் - யாழ்ப்பாணம் |
| 2. | இருபாலை | — | Express Institute - இருபாலை |
| 3. | ஆவரங்கால் | — | குகன் கல்வி நிறுவனம் - ஆவரங்கால் |
| 4 | வடமராட்சி | — | சதா பொண்ஸ் - அல்வாய் |
| 5. | தென்மராட்சி | — | Brilliant கல்வி நிறுவனம் - சங்கத்தானை |
| 6. | சுன்னாகம் | — | வினைல்ஸ் - சுன்னாகம் |
| 7. | மானிப்பாய் | — | Bitsman கல்வி நிறுவனம் மானிப்பாய் |
| 8. | சித்தங்கேணி | — | பாரதி கல்வி நிறுவனம் - சித்தங்கேணி |

மேலதிக விபரங்கடகு :

**BOND கல்வி நிறுவனம்,**
58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

விளம்பர அன்பளிப்பு:
1989, 1990, 1991 ஆண்டு 5 பரீட்சைகளுக்கான Bond கல்வி நிறுவன பரீட்சைகளால் தயார்படுத்தப்பட்டு திறமையாகச் சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர்கள்.

(சி-3834)


## விசேட அறிவித்தல்

உருக்கு/மரத்தளபாடம்/கட்டிடம் /
நீர்ப்பாசன, நீர் வடிகால் /
மின்சார ஒப்பந்த வேலைகள்

வடமாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கத்தில் அங்கத்தவராகப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே, அரசாங்கத் திணைக்களங்கள் / கூட்டுத் தாபனங்கள் / வங்கிகள் / மாநகரசபை / பிரதேசசபை போன்றவற்றில் மேற்குறிப்பிட்ட ஒப்பந்த வேலைகளைச் செய்வதற்குத் தகுதியுடையவர்களாவார்கள் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

கிராமமுன்னேற்றச்சங்கம் / சனசமூக நிலையம் / கூட்டுறவுச் சங்கம் / தனியார் ஸ்தாபனங்கள் / தனிப்பட்ட ஒப்பந்தக்காரர் சகலரும் எமது சங்கத்தில் அங்கத்தவராகச் சேர்ந்து ஒப்பந்த வேலைகளின் போது ஒத்துழைப்பை நல்கும்படி வேண்டிக் கொள்கிறோம்.

கௌரவ செயலாளர்

வடமாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கம்,
15, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (சி-3844)

## நினைவு கூருகின்றோம்...

**1992 - 01 - 25**

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் நாவற்குழியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**வினோத்\ராஜன்** [ யோகலிங்கம் செல்வகுமார் - மாணாவளை மட்டுவில் ]

கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பெண்கள் குழந்தைகள் உட்பட பதினொரு தமிழர்கள்.

கிளிநொச்சி முகாமிலிருந்து ஏவப்பட்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 6 பொதுமக்கள்

1991ஆம் ஆண்டு மணலாறில் சிறிலங்காப் படையினரின் விமானத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கிருஸ்ணகுமார்** [ பரமானந்தம் பத்மானந்தம் கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் ]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(சி/3841)

## சிந்தனைக்கு

அநீதியைத் தாங்குபவனைவிட, அநீதி இழைப்பவனே என்றும் அதிக அவதியுறுவான்.
-பிளேட்டோ


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 25-01-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05


## மலையகத்தில் பொலிஸ் ஆட்சி ஆரம்பம்

தமிழர் தேசிய இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அமைச்சர் தொண்டமான் எடுத்த தீவிர சமாதான முயற்சி பௌத்த பேரினவாத சக்திகளின் கூக்குரலினாலும், அரசாங்கத்தின் பின்னடிப்பாலும் குழம்பிப்போய் விட்டது. ஆனால், அதன் எதிரொலி தற்பொழுது மலையகத்தில் தமிழ்மக்களுக்கு எதிராகவும் தொண்டமானுக்கு எதிராகவும் இனக்கலவரத்தை கட்டவிழ்த்து விடுமளவிற்கு பிரதிபலிக்கத் தொடங்கியுள்ளது. இதற்கு அண்மையில் பதுளை மாவட்டத்தில் இனம் தெரியாதவர்களால் நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்று சாட்டாக அமைந்துள்ளது.

அமைச்சர் தொண்டமானைஅமைச்சரவையில்இருந்து நீக்க வேண்டும், பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் இருந்து நீக்கவேண்டும் என ஒரு பகுதியினர் திரு.தொண்டமானுக்கு எதிராகக் கூக்குரல் இடும் அதேவேளை ஒருபகுதியினர் ஒட்டுமொத்தமாக மலையகத்தமிழருக்கு எதிராக இனக்கலவரத்தை தூண்டிவிட முயற்சிக்கின்றனர்.

மலையகத்தைத் தற்பொழுது திரு. தொண்டமான் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதாகவும், தென்னிலங்கையில் ஒரு சட்டமும், மலையகத்தில் வேறொரு சட்டமும் நிகழ்வதாகவும், திரு. தொண்டமான் அனுமதியில்லாமல் தோட்டப்பகுதிக்குள் யாரும் பிரவேசிக்கவோ அன்றி எவரையும் கைது செய்யவோ முடியாது எனவும், ஆனால் தென்னிலங்கையில், அவசரகாலச் சட்டத்தின் கீழ் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பலர் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப் படுகின்றனர் என்றும் சிறிலங்கா மக்கள் கட்சித்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமைச்சர் தொண்டமானைப் பதவியிலிருந்து நீக்குமாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் குரல் எழுப்பியுள்ளனர். அத்தோடு, திரு. தொண்டமானின் அண்மைக்கால நடவடிக்கை குறித்தும் பெரும் கண்டனக் குரல் எழுப்பியுள்ளனர். நாட்டிற்கு நல்லது செய்யப் புறப்பட்ட தொண்டமானுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி இது.

இதேவேளை பேரினவாத சக்திகளைத் தூண்டிவிடும் வண்ணம் சிறிலங்கா புலனாய்வுத்துறையும் அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றது. வடக்கில் இராணுவம் தாக்குதல் ஒன்றை நடத்தினால் புலிகள் மலையகப் பகுதிக்குள் ஊடுருவக் கூடும் என அவை எச்சரித்துள்ளன. இதைத்தொடர்ந்து பாதுகாப்பு ஏற்பாடுகள் பெரியளவில் பலப்படுத்தப்பட்டுள்ளன. அதாவது பெருமளவு படையினர் மலையகத்தினுள் குவிக்

# தொண்டமானின் சமரச முயற்சியும் சிங்களப் பேரினவாதமும்

அன்ரன் பாலசிங்கம்

அமைச்சர் தொண்டமானின் தீர்வுத் திட்டத்தில் முற்போக்கான ஆக்கபூர்வமான பல யோசனைகள் அடங்கியிருந்தன, ஆனால் அதே சமயம் பல குறைபாடுகளும் உள்ளன. தமிழ் மாநில சுயாட்சிக்கான ஆட்சியதிகாரங்கள் திட்டவட்டமாக வரையறுக்கப்படவில்லை. சட்டவாக்க நிறைவேற்று அதிகாரங்கள் தெளிவாக வகுக்கப்படவில்லை. அத்தோடு மத்திய, மாநில அரசுகளின் உறவு, செயற்பாடு. அதிகாரப் பகிர்வு ஆகியன செம்மையாக நெறிப்படுத்தப் படவில்லை. ஒட்டுமொத்தத்தில், இத்திட்டமானது ஒரு முழுமையான தன்னாட்சியமைப்பு வடிவத்தினைக் கொண்டிருக்கவில்லை. சதையும் இரத்தமும் அற்ற வெறும் எலும்புக்கூடாகவே இத் தீர்வுத் திட்டம் வரையப்பட்டிருந்தது. ஆயினும் பிரதேச சுயாட்சிக்கான சாராம்ச அடிப்படைக் கூறுகளை இத் திட்டம் உள்ளடக்கியிருந்தது என்பதை நாம் மறுக்க முடியாது.

இந்தத் திட்டத்தை தற்காலிகமாக சுயாட்சிக்கான அமைப்பு எனப் பெயரிடலாம் என்கிறார் திரு. தொண்டமான். ஆயினும் வேண்டுமென்றால், மாகாண சபை, பிரதேசசபை, மாநிலசபை, மாநில அரசு, வலயசபை போன்ற வேறு பதங்களையும் பாவிக்கலாம் என்கிறார்.

வடகிழக்கில் வாழும் மக்கள் தமது அபிலாசைகளைப் போதுமான அளவு பூர்த்தி செய்து கொள்ளும் வகையில், தாராளமான ஆட்சியதிகாரங்கள்கொண்ட உண்மையான சுயாட்சியமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென்றும், அதற்கான அரசியல் யாப்பு திருத்தங்களையும் சட்டவாக்கியங்களையும் அரசு செய்து கொடுக்க வேண்டுமெனவும் இத் திட்டத்தின் அறிமுக முன்னுரையிலேயே வலியுறுத்தப்படுகிறது. பழைய மாகாண சபைத்திட்டம் அதிகாரவறுமையால் செயலிழந்து போன வரலாற்றைக் குறிப்பிட்டு தமிழ் மக்களுக்கு பூரணமான சுயாட்சி அதிகாரம் வழங்குவதன்மூலமே நாடு சிதறுண்டு போவதை தடுக்கலாமெனவும் இதில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

தமிழீழ மக்களுக்கு அர்த்தமுள்ள, உருப்படியானசுயாட்சி அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதை திரு. தொண்டமான் வலியுறுத்திய போதும் இச் சுயாட்சித் திட்டத்தை ஒற்றுமையாட்சி அரசியல் அமைப்பின் ஆதிக்க எல்லைக்குள் உட்படுத்தி யிருக்கிறார் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஐக்கியம், நில ஒருமைப்பாடு, இறைமை என்ற கோட்பாடுகளை திரிவுபடுத்தி முழு இலங்கையையும் சிங்கள தேசமாக வரையறுத்து பெரும்பான்மையினர் ஏதேச்சாதிகாரத்திற்கு வலுவூட்டி, இறுக்கமான சட்டக் காப்பரண்கள் கொண்ட கோட்டையாகத் திகழும் ஒற்றையாட்சி யாப்பின் கீழ் முழுமையான ஒரு பிரதேச சுயாட்சித்திட்டத்தை உருவாக்குவது கடினம். நீண்டகால அரசியல் அனுபவமுள்ள முதிர்ந்த அரசியல்வாதியான திரு. தொண்டமானுக்கு இது தெரியாததல்ல. அரசியல் அமைப்பை அடிப்படையில் மாற்றியமைக்காமல் பூரண சுயாட்சி சாத்தியமாகாது என்பதும் அவருக்குத் தெரியாதது அல்ல. பிரதேச சுயாட்சியை வலியுறுத்தி திரு. தொண்டமான் முன்வைத்த யோசனைகள் கருத்தளவில் கவர்ச்சிகரமானதாக, முற்போக்கானதாக தோன்றிய போதும் நடைமுறையில் பல சிக்கல்களைக் கொண்டிருந்தது. இதை நன்கு உணர்ந்துதான் அதிகார முதலீடு சம்பந்தப்பட்ட அதிமுக்கிய விடயங்களை அவர் வெற்றிடமாகவும் பூடகமாகவும் விட்டுவைத்துள்ளார்.

### தமிழர் தாயகம்

தமிழர் தாயகம் என்ற சொற்பதம் பாவிக்கப்படாத போதும், பிரிக்கப்படாத, தற்போதைய பூகோள எல்லைகளைக் கொண்ட வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழரின் தாயகபூமி என்பது திரு.

5

தொண்டமானின் தீர்வுத் திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. வடகிழக்கு இணையப்பெற்ற தமிழர் மாநிலத்திற்கான சுயாட்சி அமைப்பையே திரு. தொண்டமான் பரிந்துரைக்கிறார் பண்டா-செல்வா ஒப்பந்தத்திலிருந்து ரஜீவ்-ஜே ஆர் உடன்பாடுவரை தெரிவிக்கப்பட்ட யோசனைகளுடன் ஒப்புநோக்கிப்பார்க்கும் பொழுது இது முற்போக்கானது என்று சொல்லலாம். எனினும் பண்டா-செல்வா ஒப்பந்தத்தில் முன்னுரிமை கொடுக்கப்படும் சிங்கள குடியேற்றப் பிரச்சினை பற்றியும், இதனால் இதுவரைகாலமும் பறிபோன தமிழர் பிரதேசம் பற்றியும் எதுவும் குறிப்பிடப் படாதது இந்த யோசனையில் பொதிந்திருக்கும் ஒரு பெரிய குறைபாடாகும். தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்துநிற்கும் சிங்களக் குடியேற்றங்களை நிலையானதாக அங்கீகரித்து சிங்களக் குடியேற்றவாசிகளின் நலன்பேணும் பொறுப்பு நடுவன் அரசுக்கு விடப்பட்டிருக்கிறது. இனப்பிரச்சினைக்கு அடிப்படையானதும், மூலகாரணிகளில் முக்கியமானதுமான குடியேற்றப் பிரச்சினை இத் திட்டத்தில் சரியான முறையில் அணுகப்படவில்லை

ரஜீவ்-ஜே ஆர் உடன்பாடு தமிழரின் வரலாற்றுத் தாயகத்தை முழுமையாக அங்கீகரிக்காது நில ஒருமைப்பாட்டை பிரச்சினைக்கு உள்ளாக்கியது. வடகிழக்கு இணைப்பை சர்வசன வாக்கெடுப்பிற்கு உள்ளாக்கியதால் இந்தச் சிக்கல் எழுந்தது. ஆனால் தொண்டமானின் திட்டம் பூகோளத் தொடர்புடைய பிரிக்கப்படாத தமிழர் தாயகப் பிரதேசத்தை ஏற்றுக்கொள்வதென்பது ஆக்கபூர்வமானதுதான்.

### நிலவுரிமை

வடகிழக்குப் பிரதேசத்திலுள்ள அரச காணிகள் சுயாட்சி அமைப்பின் ஆட்சியதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டிருப்பது திரு. தொண்டமானின் திட்டத்தில் ஒரு வரவேற்கத்தக்க அம்சம். அரச காணிகளை நிர்வகிக்கும் கட்டுப்படுத்தும், பயன்படுத்தும் அதிகாரம் சுயாட்சி அமைப்பிற்கு வழங்கப்பட்டிருக்கிறது. இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்த இனவிகிதாசாரத்திற்கு ஏற்ற முறையில் குடியேற்றத்திற்கான நிலப் பங்கீடு அளிக்கப்பட வேண்டும் என இத்திட்டம் பரிந்துரைப்பதும் வரவேற்கத்தக்க அம்சமாகும்.

முதலமைச்சர், அமைச்சர் குழு பிரதேச அவை பற்றி மேலெழுந்தவாரியாக இத் திட்டத்தில் குறிப்பிடப்படுகிறதே தவிர இந்தப் பொறுப்புகளுக்கான நிறைவேற்று அதிகாரம் பற்றியோ பிரதேச அவையின் சட்டவாக்க அதிகாரம் பற்றியோ தெளிவாக எதுவும் வரையறுக்கப்படவில்லை. ஜனாதிபதி, மத்திய அமைச்சரவை, பாராளுமன்றம் போன்ற நடுவன் அரசு நிறுவனங்களுக்கும் பிரதேச ஆட்சி நிறுவனங்களுக்கும் மத்தியிலான அதிகாரப் பகிர்வுகளும் தெளிவாக்கப்படவில்லை. பிரதேச வரம்பிற்குள் கொண்டுவரப்படும் துறைகளுக்கும், அவற்றின் செயற்பாடுகளுக்கும் பகிர்ந்து அளிக்கப்படும் அதிகாரத்தின் அளவிற்கு ஏற்றமுறையில் சுயாட்சியதிகாரம் நிர்ணயிக்கப்படுமென தெளிவற்ற வரைவிலக்கணம் மட்டுமே கொடுக்கப்படுகிறது.

அதிகாரப் பரவலாக்கத்தை பயனுள்ளதாக, அர்த்தமுடையதாகச் செய்வதற்கு அரசியல் அமைப்பில் திருத்தம் செய்து 13 வது திருத்தச் சட்டம் பகரும் மாகாண நிரல் அரசுக்கு தடுக்கப்பட்ட நிரல், பொது நிரல் ஆகியன மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றும் தொண்டமான் ஆலோசனை கூறுகிறார். இதன்படி பொது நிரல் என்பது முற்றாக நீக்கப்பட்டு அதிலுள்ள விடயங்களும் கருமங்களும் ஏனைய இரு நிரல்களுக்கு இத்திட்டத்தில் பங்கிடப்பட்டிருக்கிறது. இது ஒரு ஆக்கபூர்வமான யோசனை. இதன் நிமித்தம் பொது நிரலிலுள்ள பல முக்கிய விடயங்கள் பிரதேச ஆட்சியமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. குறிப்பாக துறைமுகங்களைச் சொல்லலாம் திருக்கோணமலைத் துறைமுகம் உட்பட வடகிழக்கு எல்லையோரமுள்ள துறைமுகங்களும் அவற்றின் நிர்வாகமும் பிரதேச ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது.

(தொடரும்

பசிக் கொடுமையால்

# வெளியாரிடம் கைநீட்டியதை எப்படி நாம் மறப்பது?

## சர்வசன வாக்கெடுப்பு கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களை ஒன்றாக இணைப்பது தொடர்பாக அப்பகுதியில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் உத்தரவின் பேரிலேயே 1992 ஆம் ஆண்டு ஓகஸ்டு 28 ஆம் திகதி வரை பின் போடப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சட்டமும் நிகழ்வதாகவும், திரு. தொண்டமான் அனுமதியில்லாமல் தோட்டப்பகுதிக்குள் யாரும் பிரவேசிக்கவோ அன்றி எவரையும் கைது செய்யவோ முடியாது எனவும், ஆனால் தென்னிலங்கையில், அவசரகாலச் சட்டத்தின் கீழ் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பலர் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்படுகின்றனர் என்றும் சிறிலங்கா மக்கள் கட்சித்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமைச்சர் தொண்டமானைப் பதவியிலிருந்து நீக்குமாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் குரல் எழுப்பியுள்ளனர். அத்தோடு, திரு. தொண்டமானின் அண்மைக்கால நடவடிக்கை குறித்தும் பெரும் கண்டனக் குரல் எழுப்பியுள்ளனர். நாட்டிற்கு நல்லது செய்யப் புறப்பட்ட தொண்டமானுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி இது.

இதேவேளை பேரினவாத சக்திகளைத் தூண்டிவிடும் வண்ணம் சிறிலங்கா புலனாய்வுத்துறையும் அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றது. வடக்கில் இராணுவம் தாக்குதல் ஒன்றை நடத்தினால் புலிகள் மலையகப் பகுதிக்குள் ஊடுருவக் கூடும் என அவை எச்சரித்துள்ளன. இதைத்தொடர்ந்து பாதுகாப்பு ஏற்பாடுகள் பெரியளவில் பலப்படுத்தப்பட்டுள்ளன. அதாவது பெருமளவு படையினர் மலையகத்தினுள் குவிக்கப்படுகின்றனர்.

பேரினவாத சக்திகளுக்கு தற்பொழுது ஏற்பட்டுள்ள அச்சம் மலையகம் விழித்துக் கொண்டுவிடுமே என்பதாகும் நூற்றி ஐம்பது வருடங்களுக்கு மேலாக முதலில் ஆங்கிலேயருக்கும், பின்னர் சிங்கள பேரினவாத சக்திகளின் அடக்குமுறைக்குள்ளும் கிடந்த மலையகம் விழித்துக் கொண்டால், அதனைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியாது எனச் சிங்களப் பேரினவாதம் அஞ்சுகின்றது.

வடக்கு கிழக்கில் பெரும் அளவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆயுதப்போராட்டம் மலையகத்தில் ஆரம்பிக்கப்படுமானால், அப்போராட்டம் கட்டுக்கடக்கமுடியாது வெடித்துச் சிதறும் என்பதையும் சிங்களப் பேரினவாத சக்திகள் நன்கு உணர்ந்துள்ளன. வடக்கு கிழக்கில் நடைபெறும் போராட்டத்தைவிட சிறிலங்காவின் பொருளாதாரத்தையே ஆட்டம் காணச் செய்துவிடும் என்ற அச்சம் அவர்களிடம் உள்ளது.

இந்நிலையிலேயே சிங்கள பேரினவாத சக்திகள் 'துரை' களின் ஆட்சியிலிருந் இடங்களில் பொலிஸ் ஆட்சியைக் கொண்டுவருவதற்கு முனைகின்றன. இதற்கு மலையகத்தினுள் விடுதலைப்புலிகள் ஊடுருவியுள்ளார்கள் என்ற ஆதாரமில்லாதஒருகுற்றச்சாட்டை முன் வைக்கின்றனர் ஆனால், இதன் விளைவு எதிர்மறையாகவே அமையும் இராணுவ அடக்குமுறையால், எந்த ஒரு மக்கள் கூட்டத்தையும் வெற்றி கொண்டுவிடமுடியாது என்பதனை சிறிலங்கா வெளியில் சென்று கற்றுக் கொள்ளத் தேவையில்லை. இலங்கைக்குள்ளேயே வடக்கு கிழக்கில் தமிழரிடம் கற்றுக்கொண்டபாடம் போதுமானதாகும்.

# பாக். அரசின் அடக்குமுறை 'சிந்து'வை வெளியேற்றும் -பெனாசிர்

(இஸ்லாமாபாத்)

''பாகிஸ்தானில் சிந்துமாகாணத்தில் நிலவும் அரசியல் கொடுமைகளும் அக்கிரமங்களும் அதிகரித்துள்ள நடவடிக்கை யானது சிந்துமாகாணம் பாகிஸ்தானை விட்டு வெளியேறுவதற்கே வழிகோலுகிறது'' என பாகிஸ்தானின் எதிர்க்கட்சித் தலைவி பெனாசிர் பூட்டோ அரசாங்கத்தை வன்மையாக சாடியுள்ளார்.

முன்னதாக இஸ்லாமாபாத்தில் செய்தியாளரிடையே பேசிய பெனாசிர் பூட்டோ பாகிஸ்தான் மக்கள் கட்சியை நொருக்கி முறியடிக்கும் நோக்கத்துடனேயே அதிபர் குலாம் இஷாக்கான் திரு. ஜலம்சாதிக்கை சிந்துமாகாணத்தில் முதலமைச்சராக நியமித்தார் என குற்றம் சாட்டினார்.

பாவிக்கலாம் எனகிறார்.

வடகிழக்கில் வாழும் மக்கள் தமது அபிலாசைகளைப் போதுமான அளவு பூர்த்தி செய்து கொள்ளும் வகையில், தாராளமான ஆட்சியதிகாரங்கள்கொண்ட உண்மையான சுயாட்சியமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென்றும், அதற்கான அரசியல் யாப்பு திருத்தங்களையும் சட்டதல்ல. அரசியல் அமைப்பை அடிப்படையில் மாற்றிபமைக்காமல் பூரண சுயாட்சி சாத்தியமாகாது என்பதும் அவருக்குத் தெரியாதது அல்ல. பிரதேச சுயாட்சியை வலியுறுத்தி திரு. தொண்டமான் முன்வைத்த யோசனைகள் கருத்தளவில் கவர்ச்சிகரமானதாக,முற்போக்கானதாக தோன்றிய போதும் நடை

சொல்லலாம். ... பண்டா-செல்வா ஒப்பந்தத்தில் முன்னுரிமை கொடுக்கப்படும் சிங்கள குடியேற்றப் பிரச்சினை பற்றியும், இகனால் இதுவரைகாலமும் பறிபோன தமிழர் பிரதேசம் பற்றியும் எதுவும் குறிப்பிடப்படாதது இந்த யோசனையில் பொதிந்திருக்கும் ஒரு பெரிய குறைபாடாகும். தமிழர் தாய

கான நிலப் பங்கீடு அளிக்கப்படவேண்டும் என இத்திட்டம் பரிந்துரைப்பதும் வரவேற்கத்தக்க அம்சமாகும்.

முதலமைச்சர், அமைச்சர் குழு பிரதேச அவை பற்றி மேலெழுந்தவாரியாக இத்திட்டத்தில் குறிப்பிடப்படுகிறதே தவிர இந்தப் பொறுப்புகளுக்கான நிறைவேற்று அதி

றன. குறிப்பாக துறைமுகங்களைச் சொல்லலாம் திருக்கோணமலைத் துறைமுகம் உட்பட வடகிழக்கு எல்லை போரமுள்ள துறைமுகங்களும் அவற்றின் நிர்வாகமும் பிரதேச ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது.

(தொடரும்

பசிக் கொடுமையால்

# வெளியாரிடம்கைநீட்டியதை எப்படி நாம் மறப்பது?

## குவைத்திலிருந்து திரும்பியவரின் அனுபவம்

(கொழும்பு)

''பசியினாலும், மயக்கத்தினாலும், குளிரினாலும் வெறும் தரையில் சுருண்டு கிடந்த எங்களை அங்குள்ள பொலிசார் நடு இரவில் வந்து காலால் உதைத்து துன்புறுத்துவர். ஒருநாளைச்கு இரண்டு தடவை சாப்பாட்டு பார்சல் தந்தார்கள். ஒரு பக்கட்டுக்குள் ஒரேயொரு பணிசும் வடையும் இருக்கும். அதையும் இருவர் பங்கிட்டுச் சாப்பிட வேண்டியிருந்தது. மிகுதிக்கு தண்ணீரைக் குடித்து வயிற்றை நிரப்பினோம்''

குவைக் வேலை வாய்ப்புக்கென சென்று அங்குள்ள விமான நிலையத்தில் வைத்தே திருப்பி அனுப்பபபட்ட இளைஞர்கள் தமது அனுபவத்தை விபரித்தனர். இவ்வாறு திரும்பியோரில் வடக்கு, கிழக்கு மலையகத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களும் அடங்குவர்.

மாத்தளையைச் சேர்ந்த துரைச்சாமி குமாரவேற் பிள்ளை தாங்கள் அனுபவித்த துன்பங்கள் பற்றி பின்வருமாறு விபரித்தார்.

கடந்த 7ம் திகதி 3 30 மணியளவில் குவைத் புறப்பட்டோம். எங்களில்மொத்தம் 65 பேர் இவர்களில் ஐவர் பெண்கள். இப் பெண்களில் ஒருவர் தமிழ்ப்பெண். ஒவ்வொருவரும் தலா 40,000 ரூபா செலுத்தியிருந்தோம்.

ஏஜென்சிக்காரர் எம்மைப் பொறுப்பேற்க குவைத்தில் ஒருவர் இருப்பார் எனக்குறிப்பிட்டதுபோல்எவரும்எம்மைப் பொறுப்பேற்க வரவில்லை.

இதனிடையே இங்கு குளிரும் அதிகமாகையால் கைகள் விறைத்த போதெல்லாம் மலசல கூடத்திற்குள் சென்று சுடுநீரில் கைகளை நனைத்து வந்தோம். போர்க்கவும் ஏதுமில்லை. எங்களுடன் வந்த பெண்கள் ஒரு புறமாக நின்றிருந்தனர். ஆண்கள் அனைவரும் குளிரினால் ஒருவரையொருவர் நெருங்கிய படி சுருண்டுபடுத்திருந்தோம்.

குவைத் விமான நிலைய அதிகாரிகள் அடிக்கடி எம்மிடம் வந்து தங்கள் பாஷையில் மிரட்டுவார்கள். எதுவுமே எமக்குப் புரிவதில்லை. சிங்களத்தில் ஒன்றிரண்டு கெட்ட வார்த்தைகளை குவைத் அதிகாரிகள் தெரிந்து வைத்திருந்தனர். அவை விபரிக்க முடியாத வார்த்தைகள். பெண்களிடம் சென்றும் இந்தவார்த்தைகளால் திட்டினார்கள். நாம் ஆங்கிலத்தில் எது கெஞ்சினாலும் அவர்களுக்குப் புரிவதில்லை ஆங்கிலம் கதைத்தாலே கோபம் அடைந்தனர்.

நாம் எங்களுடன் வந்த பெண்களுடன் பேசுவதைக் கண்டாலே எம்மை அடிப்பர். அவர்கள் அப் பெண்களுடன் தொட்டுத்தொட்டுப்பேசினர்.

இதன் பின்னர் இலங்கைத் தூதரக அதிகாரிகள் இரண்டு தடவைகள் விமான நிலையம் வந்து எம்மிடம் விசாரித்தனர். பின்னர் 'எயர்லங்கா' விமான மூலம் நாம் தாயகம் திரும்ப ஒழுங்கு மேற் கொள்ளப் பட்டது. எட்டு நாட்கள் விமான நிலையத்தில் அடைபட்டுக் கிடந்த நாம் ஒன்பதாம் நாள் விமானத்தில் கொழும்பு நோக்கிப் புறப்பட்டோம்.

இதே வேளை தங்களுடன் வந்த ஐந்து பெண்களும் மூன்று நாட்களே விமான நிலையத்தில் இருந்ததாகவும் பின்னர் அப் பெண்களை காணவில்லைஎன்றும் தெரிவித்தார்.

விமான நிலையத்திலிருந்த குவைத் காரரர்கள் ஐந்து பெண்களையும் எங்கோ அழைத்துச் சென்றனர். எங்கென்று எமக்குத் தெரியவில்லை, இலங்கை தூதரக அதிகாரிகளிடம் இது பற்றிக் கேட்டோம். இனி மேல் தான் அப் பெண்கள் பற்றி விசாரணை நடவடிக்கையில் இறங்குவோம் என்று கூறினர். விமான நிலையத்தில் அந்தப் பெண்களைக் காண முடியவில்லை எனவம் அந்த இளைஞர் தெரிவித்தார்.

இன்னும் நாற்பது நாட்களுக்குள் எங்களை மீண்டும் ஒழுங்காக குவைத்துக்கு அனுப்பி வைப்பதாக எமது ஏஜென்சிக்காரர் எமக்கு உறுதியளித்திருக்கிறார். ஆனால் அங்கு நடந்ததை நினைக்க எமக்கு பயமாக உள்ளது எம்முடன் வந்த சிலர் வயிற்றுக்காக சிற்றுண்டிச்சாலை மேசை துடைத்தனர். வெளிநாட்டவர் சாப்பிடுகையில் கை நீட்டி தமக்கும் தரும்படி கேட்டனர். இதையெல்லாம் எப்படி மறப்பது? என்று அவர் தெரிவித்தார்.

## மனநோயாளி தற்கொலை

(யாழ்ப்பாணம்)

மனநோயாளி ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் அரியாலைப் பகுதியில் நடந்துள்ளது. இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவர் அதே இடத்தை சேர்ந்த பொன்னம்பலம் இரத்தினராசா (வயது க3) என்ற நான்கு பிள்ளை 3ளின் தந்தையாவார்.

இம்மாதம் இது வரை ஐந்து பேர் இவ்வாறு சுருக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளனர் இதில் நான்கு ஆண்களும் ஒரு பெண்மணியும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## சர்வசன வாக்கெடுப்பு கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களை ஒன்றாக இணைப்பது தொடர்பாக அப்பகுதியில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் உத்தரவின் பேரிலேயே 1992 ஆம் ஆண்டு ஒகஸ்டு 28 ஆம் திகதி வரை பின் போடப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## சர்வதேச கலாசார பேரவை; தமிழ்கலைஞர்களுக்கு இடம்

ஜெனிவாவில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் சர்வதேச கலாசார பேரவையில் இலங்கைத் தமிழ் கலைஞர்களுக்கும் இடம் வழங்கப்படவுள்ளது என்று கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் எம் எஸ். செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து இப்பேரவையின் தென் இந்தியப் பிரதிநிதியோடு தாம் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

## தமிழரைக் காப்பாற்ற தமிழக அரசு தவறிவிட்டது

### தி.மு.க. கண்டன ஊர்வலம்

(சென்னை)

காவிரிநதி நீர் சம்பந்தமாக கர்நாடக மாநிலத்தில் ஏற்பட்ட வன்முறைச் செயல்களில் இருந்து அம்மாநில சிறுபான்மை தமிழ்மக்களைப் பாதுகாக்க மத்தியஅரசும், தமிழக அரசும் தவறிவிட்டதாக கண்டனம் தெரிவித்து தி.மு.க ஊர்வலங்களை நடத்தியது.

சென்னையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இக்கண்டன ஊர்வலங்கள் தி. மு. க முன்னாள் அமைச்சர் ஆற்காடு வீராசாமி, முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் தமிழ்க்குடிமகன் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரி ஆர். பாலு ஆகியோர் தலைமையில் நடைபெற்றது

## லலித்-காமினிகுழுவினரின் கட்சிக்கு அங்கீகாரம்

(கொழும்பு)

ஐ தே.க அதிருப்தியாளர்களினால் ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய தேசிய முன்னணி கட்சியை அரசியல் கட்சியாக தேர்தல் ஆணையாளர் அங்கீகரித்து இதற்கான உத்தியோக பூர்வ கடிதத்தையும் தேர்தல் ஆணையாளர் தமக்கு அனுப்பிவைத்துள்ளார் என முன்னாள் அமைச்சரும் அதிருப்தியாளர்களில் ஒருவருமான காமினிதிசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

மேற்படி பெயரைக் கொண்ட கட்சியை அங்கீகரிப்பதை ஐ தே.க. ஆட்சேபனை தெரிவித்திருந்தது. இது தொடர்பாக கடந்த வாரம் இருகட்சி அங்கத்தவர்களையும் அழைத்துபேச்சுவார்தை நடத்தியதையடுத்து கடந்த செவ்வாய் தேர்தல் ஆணையாளர் இந்த முடிவை அறிவித்துள்ளார்,

தமது கட்சி அரசியல் கட்சியாக அங்கீகரிக்கபட்ட பின் காமினிதிசாநாயக்கா கருத்து தெரிவிக்கையில் எமது கட்சி பொது மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காக தொடர்ந்து உழைப்பதுடன் தேசிய பிரச்சினைகள் தொடர்பாக நாம் கட்சிக்குள்ளும் வெளியிலும் அச்சமின்றி ஆராய்வோம். எமது கட்சிக்கான சின்னம் பறவை எனவும் தெரிவித்தார்.

ஈழநாதம்

# மிகப் பெரும் சிறையாகவே தமிழ்நாடு இன்று தெரிகிறது

## - ஜோர்ஜ் பெனான்டஸ்

(திருச்சி)

இன்றைய நிலையில் தமிழ் நாடு மிகப் பெரிய ஒரு சிறைச் சாலையாகத்தான் எனக்குத் தெரிகிறது என ஜனதா தள தலைவர் ஜோர்ஜ் பெர்னான்டஸ் தெரிவித்துள்ளார். திருச்சியில் ஒரு கருத்தரங்கை தொடங்கி வைத்து உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இதற்குமுன் எப்போதும்இல்லாத வகையில் தமிழகத்தில் மனித உரிமைகள் மறுக்கப் படுகின்றன. அந்த அளவிற்கு அ.தி.மு.க அரசு 'டடா' சட்டத்தை தவறாகப் பயன் படுத்துகிறது. இதனை எதிர்த்து நாடு தழுவிய இயக்கம் ஒன்றை நடாத்தவேண்டும் என அவர் தெரிவித்தார்.

ஜனநாயகஅமைப்பின் அடிப் படைக் கோட்பாடுகளைக்கூட ஜெயலலிதா அரசு புரிந்து கொண்டதாக தெரியவில்லை. பொறுப்புணர்வு மிக்க முதல மைச்சர் பதவியில் தான் அமர்ந்திருப்பதைசெல்வி ஜெயலலிதா உணரவேண்டும். இன்னும் அவர் ஒரு நடிகை அல்ல.

அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்படும் விதத்தில் அ.தி.மு.க அரசு செயல்படும் விதம் குறித்து விமர்சிக்க எனக்கு வார்த்தைகளே போதாது என அவர் மேலும் தெரிவித்தார்.

## பாதயாத்திரையைக் கைவிட சி.பி.ஐ.எம் கோரிக்கை

(டில்லி)

ஒற்றுமை சமாதான யாத்திரையை ஜம்மு காஷ்மீருக்குச் செல்லாமல் நிறுத்துமாறு பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்களை மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வற்புறுத்தியுள்ளது.

இந்த யாத்திரையினால் ஜம்மு காஷ்மீரில் இப்போது நிலவும் நிலைமை மேலும் மோசமடையலாம் எனவும், பயங்கரவாதிகளும் தீவிரவாதிகளும் மேலும் குழப்பத்தை ஏற்படுத்த வழிவகுத்துவிடும் எனவும்மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பொலிட்பீரோ புதுடில்லியில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளது.

பா.ஜ.க. தொண்டர்மீது பஞ்சாப் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் நால்வர் கொல்லப்பட்டதையடுத்து ஏற்படக்கூடிய பயங்கரவிளைவுகளை உணர்ந்து யாத்திரையை நிறுத்துமாறு சி.பி.ஐ.எம். கேட்டுக்கொண்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரில் கொந்தளிப்பான இடங்களுக்கு யாத்திரை செல்லாமல் பேசித் தடுக்குமாறு மத்திய அரசாங்கத்தை முன்னாள் பிரதமர் சந்திரசேகர் வற்புறுத்திக்கேட்டுக்கொண்டுள்ளார்.

## தேர்தல் பகிஷ்கரிப்பு; மான் மறுபரிசீலனை

தேர்தலைப் புறக்கணிக்கும் முடிவை மறுபரிசீலனை செய்யப்போவதாக அகாலிதள் மான் பிரிவு கூறுகின்றது.

ஆனால் நியாயமாகவும்நேர்மையாகவும் தேர்தல் நடாத்தப்படுவதற்கு மத்திய அரசு உத்தரவாதம் தரவேண்டுமென அக்கட்சி நிபந்தனை விதித்துள்ளது,

அக்கட்சியின் தலைவர் சிம்ரஜ்ஜித்சிங்மான் கையால் எழுதி கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்,

இவ்வறிக்கையை அவரது வழக்குரைஞர் நேற்று புது டில்லியில் செய்தி நிறுவனங்களிடம் கொடுத்தார்,

ஜனநாயகத்திலும் தேர்தல் முறையிலும் தமது கட்சி நம்பிக்கை சொண்டிருப்பதாக அக்கட்சித் தலைவர் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## பிரதமர் பதவிக்கு சரோன் போட்டியிட முடிவு

(டெல்அவிவ்)

இஸ்ரேலின் பிரதம மந்திரி பதவிக்கு தாம் போட்டியிடப் போவதாக இஸ்ரேலின் வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு. ஏரியல் சரோன் அறிவித்துள்ளார்.

டெல்அவிவ் இல் மாணவரினால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டமொன்றில் பேசும் போது அவர் இதைத் தெரிவித்தார்.

## சோமாலியாவிற்கு ஆயுதம்; ஐ.நா. தடைவிதித்தது

(லண்டன்)

சோமாலியா நாட்டில் சண்டையிட்டுக் கொள்ளும் குழுக்களுக்கு ஆயுதம் வழங்கக் கூடாது என ஐ.நா. பந்தோ

தட்ட 20.000 பேர் வரையில் பலியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதிபர் ஹலிமாலியை ஆதரித்து நிற்கும் படைகளுக்கும்

அத்துடன் நாட்டின் பாதுகாப்பு பந்தோபஸ்து நிலைமைகளை தம்மால் சமாளிக்க முடியுமெனவும் அரபு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி

## கலைநிகழ்ச்சி இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் யாழ். மாவட்டப் பிரிவினரின் ஆதரவுடன் எதிர்வரும் முதல் தி தியன்று உரும்பராய் அன்னை பூபதி கலையரங்கில் நடாத்தப்பட விருந்த நிகழ்ச்சிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட அத் தினத்தில் சந்தனக்காடு (நாடகம்) செவ்வானம் (எழுச்சிப் பாடல்கள்) ஆகிய கலை நிகழ்ச்சிகள் உரும்பராய் சைவத் தமிழ் விதியாலயத்தில் நடைபெறவுள்ளன எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## தமிழகத்தில் இருந்து சிங்கள அகதி

(திருக்கோணமலை)

தமிழகத்திலிருந்து கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட அகதிகளில் மன்னாரைச் சேர்ந்த சிங்களவர் ஒருவரும் இடம் பெற்றுள்ளார். மன்னாரில் தமிழ்க் குடும்பமொன்றுடன் தங்கியிருந்த வில்பிரட் என்னும் இச்சிங்களவர் தாம் தங்கியிருந்த குடும்பத்துடன் தமிழகம் சென்றதாகவும், தற்போது அங்கிருந்து திரும்பி வருவதாகவும் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## அறுவடை முடிந்ததும் சிறுதானியம் செய்க

### - அரச அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பெரும்போகஅறுவடை முடிவடைந்ததும் சிறுதானிய உற்பத்தியில் ஈடுபடுமாறு யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் முக்கிய உணவுப் பொருள்களை கொண்டுவருவதில் ஏற்பட்டுள்ள இடர்களினாலும் விலை அதிகரிப்பினாலும் தொழில்களை இழந்தமையினாலும் கொள்வனவு சக்தியை இழந்துள்ள மக்களிடையே போசாக்கின்மை அதிகரித்துக் காணப் படுகிறது.

இதனை ஓரளவு நிவர்த்தி செய்யும் நோக்குடன் விவசாயிகள் பெரும்போக அறுவடை முடிவடைந்தவுடன் கௌபி, பாசிப்பயறு, எள்ளு ஆகிய பயிர்வகைகளை நெற் காணிகளில் பயிரிடுங்கள்.

பணப்பயிர்களுக்கு வெளிச் சந்தை வாய்ப்புகள் இல்லாது போயுள்ளதால் தற்போதைய தேவைக்கேற்ப சிறு தானியங்களை உற்பத்தி செய்க. விவசயிகளுக்குத் தேவையான தானிய விதைகள் குறைந்த விலையில் சகல கமநல சேவை நிலையங்களாலும் விவசாய உதவிப்பணிப்பாளராலும்விநியோகிக்கப்பட்டு வருகின்றன. எனவே இவற்றைப் பெற்று உங்கள் வருமானத்தைப் பெருக்குவதுடன் மக்களுக்கு உதவுங்கள் என்று அவர் கேட்டுள்ளார். (ச)

உலகில்

## 191 இராணுவத்தினருக்கு

# செயற்கை கால் பொருத்த ஒரு கோடி ரூபா செலவு

(கொழும்பு)

கடந்த இரண்டு வருட காலத்தில் ஊனமடைந்த சிறிலங்கா இராணுவத்தினருக்கு செயற்கை உறுப்புக்களைப் பொருத்துவதற்காக 10,018,238 ரூபா தேசிய பாதுகாப்பு நிதியில் இருந்து ஒதுக்கப்பட்டது என தெரிவிக்கப்படுகிறது.

இதன் மூலம் 191 இராணுவதினருக்கு செயற்கை உறுப்புக்கள் பொருத்தப்பட்டன.

1990 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் 8,65, 568 ரூபா ஊனமடைந்த இராணுவத்தினருக்கான செயற்கை உறுப்புக்களை இறக்குமதி செய்வதற்காகவும்,

1991 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் செயற்கை உறுப்புக்கள் பொருத்துவதற்காக இருபத்தியொரு இராணுவத்தினர் வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்டனர். இதற்கென 3,360,790 ரூபாயும்,

ஊனமடைந்த இராணுவத்தினரின் உறுப்புக்களின் அளவுகள் எடுக்கப்பட்டு செயற்கை உறுப்புக்கள் தயாரிப்பதற்காக வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டன. இந்த ஏற்பாட்டின்படி 1991 இல் 120 ஊனமடைந்த இராணுவத்தினருக்கு செயற்கை உறுப்புக்களைப் பொருத்துவதற்காக 5,791,880 ரூபாவும் ஒதுக்கப் பட்டுள்ளது.

அத்துடன் ராகமையில் அமைக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு நிலையமான 'ரணவிருசெவன' வை விரிவாக்குவதற்கான விசேட திட்டமொன்றுக்கு 16,500,000 ரூபாய் 1991 இல் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் மேலதிகமாக610,000ரூபாவைதேவையான மருத்துவக் கருவிகளை இறக்குமதி செய்யவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனை விட கண்களில் காயமடைந்த இராணுவ வீரர்களின் சத்திரசிகிச்சைகளை செய்வதற்கு தேவையான " விற்றெட்டோமி யூனிற்" ஒன்றை கொள்வனவு செய்வதற்காகவும் 1.3 மில்லியன் ரூபாவையும்,

வடக்கில் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினருக்கு உணவுப் பொருள்களை பாதுகாத்து வைப்பதற்கு குளிர்சாதனப் பெட்டிகள் போன்றவற்றைக்கொள்வனவு செய்ய 23,645,000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

1992 ஆம் ஆண்டு அவசர சிகிச்சைக்காக வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்ட இராணுவத்தினருக்கு 2,031,377 ரூபா செலவிடப்பட்டது என்றும், இந்த நிதியெல்லாம் தேசிய பாதுகாப்பிற்கு என ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து எடுக்கப் பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வட்டுக்கோட்டை வாசி வவுனியாவில் சுட்டுகொலை

(வவுனியா)

சாஸ்திரி கூழாங்குளம் பகுதியில் யாழ்ப்பாணவாசி ஒருவர் இராணுவத்தினரின் துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். யாழ். வட்டுக்கோட்டையைச் சேர்ந்த எதிர் வீரசிங்கம் (35 வயது) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

இவர் கொழும்பிலிருந்து வவுனியா பெரியகட்டுப் பகுதியிலுள்ள தமது உறவினரின் வீட்டில் நிகழவிருந்த பூப்புனித நீராட்டு வைபவத்திறகு வருகை தந்திருந்தார் எனவும் பாதை மாறிப்போய் சாஸ்திரி கூழாங்குளம் இராணுவ முகாம் இருக்கும் பகுதியில் நடமாடியபோது படையினரால் சுடப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

## மருந்துப்பொருள் உதவி

வடக்கு கிழக்குப் பகுதியிலுள்ள அகதிகளுக்கு தேவையான அவசர மருந்துப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக பிரிட்டன் அரசாங்கம் முப்பத்தெட்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை வழங்கியுள்ளது. யுனிசெப் நிறுவனத்திற்கு ஊடாக இந் நிதியுதவிவழங்கப்படவுள்ளது. கடந்த ஆண்டிலும் பிரிட்டன் இத்தகைய நிதியுதவியை வழங்கியது குறிப்பிட த்தக்கது.

## அங்கீகாரம்

முன்னைய பத்து சோவியத் குடியரசுகளையும் சுதந்திரமான ஆட்சி உரிமை பெற்ற நாடுகள் என பிலிப்பைன்ஸ் அரசு அங்கீகரித்துள்ளது.

நேற்று முன்தினம் மணிலாவில் அதிகாரபூர்வமாக சோவியத் குடியரசுகள் அங்கீகரிக்கப்பட்டதை அறிவித்தது.

## 12 வயதிற்கு உட்பட்ட 20 சிறுவர் கிழக்கில் கைது

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட பாதுகாப்பு படையினர் பன்னிரண்டு வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் இருபது பேரைக் கைது செய்துள்ளனர். ஆலையடிவேம்பு பகுதியில் கைது செய்யப்பட்ட இவர்கள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

## இம்மாதம் 30, 31 ஆம் திகதிகள், வேலை அனுபவ தினங்கள் கல்விபணிப்பாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்த இரு நாட்களிலும்

## செஞ்சிலுவை

தாகவும், தமிழ்மக்களின் போக்குவரத்து தடுக்கப்பட்டு இருப்பதாகவும், இவற்றின் காரணமாகத் தமிழ் மக்கள்

யப்போவதாக அகாலி தள் மான் பிரிவு கூறுகிறது.

ஆனால் நியாயமாகவும்நேர்மையாகவும் தேர்தல் நடாத்தப்படுவதற்கு மத்திய அரசு உத்தரவாதம் தரவேண்டுமென அக்கட்சி நிபந்தனை விதித்துள்ளது,

அக்கட்சியின் தலைவர் சிம்ரஜ்ஜித்சிங்மான் கையால் எழுதி கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்,

இவ்வறிக்கையை அவரது வழக்குரைஞர் நேற்று புது

ஜனநாயகத்திலும் தேர்தல் முறையிலும் தமது கட்சி நம்பிக்கை சொண்டிருப்பதாக அக்கட்சித் தலைவர் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

ஜம்மு காஷ்மீரில் கொந்தளிப்பான இடங்களுக்கு யாத்திரை செல்லாமல் பேசித் தடுக்குமாறு மத்திய அரசாங்கத்தை முன்னாள் பிரதமர் சந்திரசேகர் வற்புறுத்திக்கேட்டுக்கொண்டுள்ளார்.

# பிரதமர் பதவிக்கு சரோன் போட்டியிட முடிவு

(டெல்அவிவ்)

இஸ்ரேலின் பிரதம மந்திரி பதவிக்கு தாம் போட்டியிடப் போவதாக இஸ்ரேலின் வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு. ஏரியல் சரோன் அறிவித்துள்ளார்.

டெல்அவிவ் இல் மாணவரினால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டமொன்றில் பேசும் போது அவர் இதைத் தெரிவித்தார்.

அத்துடன் நாட்டின் பாதுகாப்பு பந்தோபஸ்து நிலைமைகளை தம்மால் சமாளிக்க முடியுமெனவும் அரபு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி சமாதான ஒப்பந்தம் செய்து கொள்ள முடியும் எனவும் திரு. ஏரியல் சரோன் தெரிவித்ததாக இஸ்ரேலிய வானொலியை மேற்கோள் காட்டி பி.பி. ஸி இதைத் தெரிவித்தது.

# சோமாலியாவிற்கு ஆயுதம்; ஐ.நா. தடைவிதித்தது

(லண்டன்)

சோமாலியா நாட்டில் சண்டையிட்டுக் கொள்ளும் குழுக்களுக்கு ஆயுதம் வழங்கக் கூடாது என ஐ. நா. பந்தோபஸ்து சபை தடைவிதித்துள்ளது.

அதேவேளை அந்நநாட்டுக்கு மனிதாபிமான உதவிகளை மேற்கொள்வதற்கு ஐ. நா. அனுமதி அளித்துள்ளது.

கடந்த இரண்டு மாதங்களிலும் மட்டும் சோமாலியஉள்நாட்டுப் போரினால் கிட்டத்தட்ட 20. 000 பேர் வரையில் பலியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதிபர் ஹலிமாலியை ஆதரித்து நிற்கும் படைகளுக்கும் ஜெனரல் மொகமட்பராயை ஆதரித்து நிற்தும் படைகளுக்கும் இடையே கடந்த நவம்பரில் மூண்ட சண்டை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது இதனாலேயே ஐ. நா மேற்படி குழுக்களுக்கு ஆயுதம் விற்கக்கூடாது என தடை விதித்துள்ளது.

## முன்னையசோவியத்குடியரசுகளுக்கு

# உதவிகளை விரிவுபடுத்த மேற்குநாடுகள் இணக்கம்

முன்னாளய சோவியத் குடியரசுகளுக்கு இப்பொழுது வழங்கப்படும் உதவியை விரிவுபடுத்துவது குறித்து அமெரிக்கா பிரான்ஸ் உட்பட பல பொருளாதார வல்லரசு நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளன.

புதிதாக சுதந்திரம் பெற்றுள்ள அந்நாடுகளில் காணும் நிலைமையை ஆராய்வதற்கென நேற்று முன்தினம் இருநாள் சர்வதேச மாநாடு ஒன்றை அமெரிக்கா கூட்டியிருந்தது. அந்த மாநாட்டிலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது.

இதன்பிரகாரம் ரஷ்யாவுக்கும் பிறநாடுகளுக்கும் எரிபொருள், உணவு, மருத்துவ உதவி, தொழில் நுட்பஉதவி ஆகியவற்றின் விநியோகத்தை விரைவுபடுத்துவது என்றும் முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே முன்னைய சோவியத் குடியரசுகளுக்கு அவசரகால உணவு உதவி தொழில் நுட்ப உதவிகளை வழங்க 47 நாடுகளின் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என மாநாட்டின் பின்னர் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேகர் தெரிவித்தார்.

அமெரிக்க விமானங்கள் விரைவிலேயே உதவிப் பொருள்களை எடுத்துச்செல்ல உள்ளதாகவும் தொடக்கத்தில் மூன்று கோடியே எண்பத்திநாலு இலட்சம் தொன் மதிப்புள்ள உணவுப் பொருள்கள் அனுப்பப்படும் எனவும் இந்தஉணவு உதவிகள்இரண்டு வாரத்தில் முடிவடையும் எனவும் தெரிவித்தார்.

# உணவுப்பொருள் வாங்க ஆயுதங்களை விற்போம்

அத்தியாவசிய உணவுப் பொருள்களை வாங்குவதற்காக தனது பாரிய இராணுவக் கருவிகளை விற்பனை செய்யப் போவதாக உக்ரெயின் குடியரசு உலக சமுதாயத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஏவுகணைகள், பாரிய டாங்கிகள் உட்பட பல ஆயுதங்கள் உக்ரெயின் வசம் உள்ளன என்பதும், இந்தியா உட்பட பல நாடுகள் அவற்றை வாங்க முற்படலாம் எனவும் தெரிய வந்துள்ளது.

# இன்றுநோயாளர் சமுகம்தரவும்

கப்பல்மூலம் சிகிச்சைக்காக கொழும்பு செல்ல பதிவு செய்த நோயாளர்களை இன்று சனிக்கிழமை போதனா வைத்தியசாலைக்கு சமுகமளிக்குமாறு வைத்தியசாலை பணிப்பாளர் கேட்டுள்ளார்.

கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சைபெற யாழ். ஆஸ்பத்திரியால் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களும் அவர்களது உறவினர்களும் தமக்கு இருநாட்களுக்குத் தேவையான உணவு, குடிநீர், மற்றும் மருந்து ஆகியவற்றுடன் இன்று காலை 7 மணிக்கு வைத்தியசாலைக்கு சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். (ச)

மாவட்ட விவசாயிகளுக்கு யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் முக்கிய உணவுப் பொருள்களை கொண்டுவருவதில் ஏற்பட்டுள்ள இடர்களினாலும் விலை அதிகரிப்பினாலும் தொழில்களை இழந்தமையினாலும் கொள்வனவு சக்தியை இழந்துள்ள மக்களிடையே போசாக்கின்மை அதிகரித்துக் காணப்படுகிறது.

இதனை ஓரளவு நிவர்த்தி செய்யும் நோக்குடன் விவசாயிகள் பெரும்போக அறுவடை முடிவடைந்தவுடன் கௌபி, பாசிப்பயறு, எள்ளு ஆகிய பயிர்வகைகளை நெற்காணிகளில் பயிரிடுங்கள்.

பணப்பயிர்களுக்கு வெளிச்சந்தை வாய்ப்புகள் இல்லாது போயுள்ளதால் தற்போதைய தேவைக்கேற்ப சிறு தானியங்

நிலையங்களாலும் விவசாய உதவிப்பணிப்பாளராலும்விநியோகிக்கப்பட்டு வருகின்றன. எனவே இவற்றைப் பெற்று உங்கள் வருமானத்தைப் பெருக்குவதுடன் மக்களுக்கு உதவுங்கள் என்று அவர் கேட்டுள்ளார். (ச)

# 12 வயதிற்கு உட்பட்ட 20 சிறுவர் கிழக்கில் கைது

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட பாதுகாப்பு படையினர் பன்னிரண்டு வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் இருபது பேரைக் கைது செய்துள்ளனர். ஆலையடிவேம்பு பகுதியில் கைது செய்யப்பட்ட இவர்கள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

வவுனியா பெரியகட்டுப் பகுதியிலுள்ள தமது உறவினரின் வீட்டில் நிகழவிருந்த பூப்புனித நீராட்டு வைபவத்திறகு வருகை தந்திருந்தார் எனவும் பாதை மாறிப்போய் சாஸ்திரி கூழாங்குளம் இராணுவ முகாம் இருக்கும் பகுதியில்

## இம்மாதம் 30, 31 ஆம் திகதிகள்,

# வேலை அனுபவ தினங்கள் கல்விபணிப்பாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் வேலை அனுபவ தினங்களாக இம்மாதம் 30, 31 ஆம் திகதிகளை யாழ். கல்வித்திணைக்களம் பிரகடனப்படுத்தியுள்ளதாக யாழ். பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

இந்த இரு நாட்களிலும் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் இணைந்து தத்தமது பாடசாலைகளின் சுற்றுப்புறங்களையும், பாடசாலை வளவுகள் நூல் நிலையங்கள், ஆய்வுகூடங்கள் மற்றும் வகுப்பறைகளைச் சுத்தம் செய்து சுகாதாரத்தைப் பேணும் நடவடிக்கைகளை மேற்கொள்வர். அத்துடன் சூழல் சுகாதாரத்தைப் பேண வேண்டிய அவசியத்தையும், தொழிலின் மகத்துவத்தையும் ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் புகட்டுதல் வேண்டும் எனவும் குறிப்பிட்ட அவர் இதில் ஈடுபடும் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும்அவ்வப்பகுதி பொது ஸ்தாபனங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள், பெற்றோர், ஆசிரியர் சங்கங்கள் ஆகியன தேநீர், சிற்றுண்டி மற்றும் உணவு வகைகளை வழங்கி அவர்களை ஊக்குவிக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளார். (ச)

பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக பிரிட்டன் அரசாங்கம் முப்பத்தெட்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை வழங்கியுள்ளது. யுனிசெப் நிறுவனத்திற்கு ஊடாக இந்நிதியுதவிவழங்கப்படவுள்ளது. கடந்த ஆண்டிலும் பிரிட்டன் இத்தகைய நிதியுதவியை வழங்கியது குறிப்பிடத்தக்கது.

## அங்கீகாரம்

முன்னைய பத்து சோவியத் குடியரசுகளையும் சுதந்திரமான ஆட்சிஉரிமை பெற்ற நாடுகள் என பிலிப்பைன்ஸ் அரசு அங்கீகரித்துள்ளது.

நேற்று முன்தினம் மணிலாவில் அதிகாரபூர்வமாக சோவியத் குடியரசுகள் அங்கீகரிக்கப்பட்டதை அறிவித்தது.

## உலகில்

ஆட்கள் காணாமல்போன, போய்க்கொண்டிருக்கின்ற விவகாரத்தில் சிறிலங்காவே உலகில் முதலிடத்தைப் பெறுவதாக இந்த ஐ.நா, அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வறிக்கை இன்னமும் பகிரங்கமாக வெளியிடப்படவில்லை. அடுத்த வாரம் ஐ. நா. மன்றத்தின் அகதிகள் பராமரிப்பு ஆயத்தின் முன் இந்த மனித உரிமைகள் பற்றிய அறிக்கை விவாதத்தில் பிரிட்டனும் ஒல்லாந்தும் கேள்வி எழுப்பும் எனவும் தெரியவருகின்றது.

இலங்கையில் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் போனோர் தொகை ஏறத்தாழ பன்னிரண்டாயிரம் என்று உத்தியோகபூர்வ மதிப்பீடுகள் தெரிவித்துள்ளன. 1983 ஆம் ஆண்டின் பின்னர் காணாமல்போனோர் தொகை இதுவெனக் கூறப்படுகிறது. அவ்வாறிருப்பினும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்த எண்ணிக்கை மிகமிக அதிகம் என்பது குறிப்பிடத்தககது.

கடந்த அக்டோபர் மாதத்தில் ஐ. நா. குழுவினர் சுமார் பன்னிரண்டு நாட்கள் இலங்கையில் தங்கி பல்வேறு இடங்களுக்கும் சென்று பல பேரையும் செவ்விகண்டு நிலைமையை உன்னிப்பாக கவனித்தே இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையில் அகதிகளுக்கான ஐ. நா. பராமரிப்பு ஆயத்தின் கூட்டத்தில் இலங்கையில் மனித உரிமை மீறல் விவகாரம் பேசப்படும்போது தமிழ்நாட்டில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் மற்றும் அவர்களை திருப்பி அனுப்பும் விடயத்திலுள்ள மனிதாபிமானப் பிரச்சினைகள், அரசியல் நெருக்கடிகள் என்பவையும் குறிப்பிடப்படலாம் எனவும் தெரியவருகின்றது.

## சிவில்

கார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் நேற்று முன்தினம் பாராளுமன்றகட்டடத்தொகுதியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இவர்கள் தமது கடமையை பொறுப்பேற்றால் அரசாங்க கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த உதவியாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

## தீர்வை

அவர் தொடர்ந்து பேசுகையில் அமைச்சர் தொண்டமானுக்கோ அல்லது அண்டமானுக்கோ, அமைச்சர் செல்லச்சாமிக்கோ அல்லது வீதியில் செல்லும் சைமனுக்கோ இனப்பிரச்சினை தீர்விற்கான ஆலோசனையை வழங்க உரிமையுண்டு. அதைப் பரிசீலிகது ஏற்றுக்கொள்வதோ அல்லது அதைநிராகரிப்பதோ அரசின் கையில்தான் இருக்கிறது இதை எதிர்த்துக்கோஷமிடுபவர்கள் மாற்று ஆலோசனைகளை முன் வைக்கவேண்டும் எனத் தெரிவித்துக்கொண்டார்.

## யாழ்

கில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டதுடன்அகதிமுகாம்களில் தங்கியுள்ள மக்களையும் சந்தித்து அவர்களிடம் உண்மை நிலைமைகளை நேரில் கேட்டறிந்தனர். (ச)

## இராணுவ

லப்பட்டனர்.

சம்பூரைச் சேர்ந்த வைரமுத்து யோகநாதன், வீரசிங்கம் அரசமணி, கனகசிவபால், இராசலிங்கம் ரவிநேசன், செல்லையா யோகேஸ்வரன் ஆகியோரே இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டோராவர். மற்றுமொருவரது சடலம் அடையாளம் காட்டப்படவில்லை. இந்த ஐவரும் இருபது வயதுக்கும் முப்பது வயதுக்கும் இடைப்பட்டவர்களாவர்.

மேலும் மல்லிகைத்தீவு, பட்டித்திடல், 58ம் கிராமம் போன்ற பகுதிகளில் சுற்றிவளைப்பு, தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட படையினர் அறுபதுக்கு மேற்பட்டோரைத் தடுதது வைத்திருப்பதாகத் தெரியவருகின்றது.

## இராணுவத்தால்

பாவித் தமிழ் மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கையின் போதே இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

## சீனன்குடா

தல் கூறி ஆசுவாசப்படுத்திய இந்திய அதிகாரிகள் உங்களுக்கு எதுவும் நடக்காது என உறுதியளித்ததாகவும் தெரிய வந்துள்ளது.

## செஞ்சிலுவை

தாகவும், தமிழ்மக்களின் போக்குவரத்து தடுக்கப்பட்டு இருப்பதாகவும், இவற்றின் காரணமாகத் தமிழ்மக்கள் உணவு மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

மேலும் சம்பூர் பகுதியில் புதிதாக இரு இராணுவ முகாம்கள் நிறுவப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது. மருத்துவ சேவைகளும் இராணுவத்தினரால் தடுக்கப்பட்டுள்ளன.

## 110 ஆசிரியர்கள்

கிறது.

மேற்படி கூட்டத்தில் சகல கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர்களும் ஆசிரியர் சங்க பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ச)

## பெப். 5இல்

வினாத்தாள்கள் நேற்றுகுமாரி கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டது.

இப்பரீட்சை சமகாலத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

யாழ். நகரில் இப்பரீட்சை பதினாறு நிலையங்களில்நடைபெறும் எனவும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அடுத்த வாரம் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவித்த கல்விப் பணிப்பாளர், இதற்கான வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இப்பரீட்சைக்கு 5228 பேர் விண்ணப்பித்ததும், இதில் 3000ற்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் அடிப்படைக் கல்வித் தகைமை இல்லாத காரணத்தினால் யாழ் செயலகத்தினால் நிராகரிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

மேற்படிபரீட்சையின் மூலம் ஐந்நூறு பேர் தற்காலிகஎழுதுவினைஞர்களாகத் தெரிவு செய்யப்படவுள்ளது தெரிந்ததே.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.